සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் லியத்தின் நெடுநெறிக் கறங்க
குறும்புதற் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண் அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பை அணந்தன்ன
தண்கமழ் கோடல் தாது பிணி அவிழ
திரிமருப் பிரலை தெள்ளறள் பருகி
காமர் துணையொடு ஏமுற வதிய
காடு கவின் பெற்ற தண்பதப் பெரு வழி...

(i) இச்செய்யுட் பகுதியில் இடம்பெறும் தாவரங்கள் யாவை? அவை எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகின்றன?

(ii) இங்கு குறிப்பிடப்பெறும் விலங்குகள் யாவை? அவற்றின் செயற்பாடுகளாக விவரிக்கப்பெறுபவை யாவை?

(iii) இங்கு கையாளப்பட்டுள்ள உவமைகளை இனங்கண்டு விளக்குக.

(ஆ) அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும் வெய்து உயிர்ப்போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய் கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான் இமைப்பு இலன் நயனம் என்றான்.

(i) இச்செய்யுளில் விவரிக்கப்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ii) இங்கு 'வீரன்' எனச் சுட்டப்படுபவனின் செயற்பாடுகளாக விவரிக்கப்பெறுபவை யாவை? அவற்றால் உணர்த்தப்படும் விடயம் யாது?

(iii) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமைகளை இனங்கண்டு விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**2.** (அ) பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியில் உள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன்; தகத்தகாயம் பார்.
விலகிற்று காரிருள்தான்; பறந்தது பார் அயர்வு.
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான் அடடா!
மிலையும் எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்!
மேலெல்லாம் விழி அள்ளும் ஒளியின் ப்ரவாகம்!
நலம் செய்தான்; ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான்; காட்டி
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை.

ஒளி செய்தான் கதிர்க்கோமான் வானத்தில் மண்ணில்
உயர்மலைகள், சோலை, நதி இயற்கை எழில் பார்.
களி செய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! அதனால்
கவிதைகள் கைத்தொழில்கள் என்னென்ன ஆக்கம்!
தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி.
திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்.
ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான்; வானில்
உயர்கின்றான் உதயசூரியன் வாழ்க நன்றே!

(i) சூரியனது உதயத்தால் மனிதர்களிடம் ஏற்பட்ட புத்துணர்ச்சியும் அதன் விளைவுகளும் எவ்வெவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன?

(ii) சூரியோதயத்தால் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களும் அழகும் எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகின்றன?

(iii) பின்வரும் தொடர்களை விளக்குக.
'திசைமகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்'
'நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை'
'தகத்தகாயம் பார்'
'ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான்'

(iv) இக்கவிதையில் இடம்பெற்றுள்ள உருவகங்களை இனங்கண்டு விளக்குக.

[பக். 3 ஐப் பார்க்க

**அல்லது**

(ஆ) நெறியாளர் மேடையில் வந்து அவரது அறிமுகத்தை முடித்துப்போகும் வரை இருவரும் சோகச் சிலையாக நிற்கிறார்கள். இசை சோகமழை பொழிகிறது. நெறியாளர் பேசத் தொடங்கியதும் இசை மெல்லத் தேய்ந்து, அவர் சென்றதும் கூடி, பின் வசனங்களுக்கு இடம்கொடுக்கும் வகையிலே தேய்ந்து மறைகிறது.

நெறியாளர் : (மேடையில் உள்ள பொருள்கள், நடிகர்களைக் கவனித்தபடி கீழ்மேடைக்கு வந்து)

இரு துயரங்கள். இந்த நாடகத்தினுடைய மூலம் அன்ற்றன் செக்கோ எழுதின ஒரு சிறுகதை. அந்தச் சிறுகதையிலை நாடக அம்சங்கள் நிறைய இருக்கெண்டு தோன்றிச்சுது எனக்கு. அதுதான் நாடகமாக்கித் தரச்சொல்லிக் கேட்டன். முருகையன்தான் நாடகமாக்கித் தந்தவர். அங்கை நிக்கிறவர்தான் டொக்ற்றர் கந்தப்பு. இது அவருடைய மனைவி. அவைக்கு ஒரேயொரு பிள்ளை. அந்தப்பிள்ளை இப்போ கொஞ்சம் முந்தித்தான் செத்துப்போயிற்றுது. வயிற்றோட்டம் - படுவன் எண்டு தமிழிலை சொல்லுறது. வயதான காலத்திலைதான் அவைக்கு அந்தப் பிள்ளை பிறந்தது. அவையும் அந்தப் பிள்ளையை ஆசையாயும், கவனமாயும்தான் வளர்த்தவை. என்ன செய்யிறது? அந்தக் கவலையிலைதான் அவரும் அவற்றை பெண்சாதியும் நிக்கினம். இந்தத் துக்கமான செய்தியோடைதான், நாங்கள் நாடகத்தை ஆரம்பிக்கிறம். சரி, உங்கடை ரசனைக்குக் குறுக்க நான் நிக்கிறது சரியில்லை. நீங்கள் நாடகத்தைப் பாருங்கோ.

(நெறியாளர் போகிறார். கந்தப்பு தலைமயிரை ஒதுக்கிக் கொண்டே வெளிப்புறமாகப் பார்க்கிறார். பின்னர் பெருமூச்சு விடுகிறார். சட்டைப் பையைத் துழாவி, இருபது முப்பது நொடிகளுக்குப் பிறகு ஒரு கைலேஞ்சியை எடுக்கிறார். அதை இடது கைக்கு மாற்றிக்கொண்டு, பிறகும் காற்சட்டைப் பையில் எதையோ தேடுகிறார். ஒரு நெருப்புப் பெட்டி அகப்படுகிறது. சிறிது நேரம் அதை வருடிக் கொண்டிருந்து விட்டு, பிணத்தின் தலைமாட்டில் உள்ள குத்துவிளக்கில் ஒரு திரியை இட்டு ஏற்றுகிறார். பிறகு சில ஊதுவத்திகளையும் பற்றவைத்துப் பிணத்தருகிலே வைக்கிறார். சிறிது நேரம் குனிந்து பார்த்துக் கொண்டு நிற்கிறார். கண்களை ஒரு தடவை மூடித் திறந்துவிட்டு வெளியே வருகிறார். கதவு மணி அலறுகிறது. டொக்ற்றர் சட்டைத் தெறியைக்கூடப் பூட்டாமல் வெளியே வந்து பார்க்கிறார். மனோகரன் விரைந்து நுழைகிறான்.)

(i) மூலப்படைப்பு, அதனைத் தழுவித் தமிழில் ஆக்கப்பட்ட படைப்பு என்பன பற்றி இங்கு முன்வைக்கப்பட்டுள்ள பிரதான விடயங்கள் யாவை?

(ii) சோவியத் நாட்டுப் பின்னணியில் எழுதப்பட்ட படைப்பைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட படைப்பு, தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களுக்கு அமைவாக மாற்றப்பட்டுள்ளது என்பதை உணர்த்துவனவாக இங்கு புலனாகும் விடயங்கள் யாவை?

(iii) பார்வையாளர்களோடு, நாடக நெறியாளர் நேரடியாகத் தொடர்புபடுவது இங்கு எவ்வாறு புலனாகின்றது?

(iv) நாடகத்தின் பின்னணியிசை பற்றிய விவரிப்பில் காணத்தகும் நயங்கள் யாவை?

(04 × 4 = 16 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



## பகுதி II

**3.** திருக்குறள் **காலம் அறிதல்** என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) காலத்தின் சிறப்பும் அதை அறிவதன் பயனும்

(ஆ) காலம் அமையாதவிடத்துக் காக்கவேண்டிய பொறுமையும் அதன் சிறப்பும்

(இ) காலம் வரும்வரை காத்திருக்கவேண்டிய முறைமையும்
காலம் வந்ததும் காரியம் ஆற்றவேண்டிய வகையும்

(ஈ) கையாளப்பட்டுள்ள அணிகளின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

**4.** கம்பராமாயணம் **குகப்படலத்தில்**, பரதன் குகனைக் காண்பதற்கு, முந்திச் சென்றது தொடக்கம், நாவாய்களைக் கொண்டுவருமாறு குகன் கட்டளை இட்டது வரையான பகுதியில்,

(அ) குகன் - பரதன் சந்திப்பு இடம்பெற்ற வகை

(ஆ) பரதனின் மனத்தூய்மை அறிந்ததும் குகனிடம் உண்டான வியப்பு

(இ) கங்கைக் கரையில், இராமலக்குமணர் தங்கியிருந்த வகையை அறிந்த பரதனின் மனநிலை

ஆகியன, உணர்ச்சிகரமான வகையில் வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

**5.** 'எஸ்.பொ.' வின் **தேர்** சிறுகதையில்,

(அ) குமாரசாமியின் இயல்புகள்

(ஆ) திருமண சம்பந்தத்தால் அவனுக்கும் குடும்பத்தாருக்கும் இடையில் உண்டான சிறு விரிசல்

(இ) அந்த விரிசலும், குடும்பத்தோடு ஒட்டாத குமாரசாமியின் நடத்தைகளும் முகத்தாரிடம் உண்டாக்கிய மன உளைச்சல்கள்

என்பன வெளிப்படுத்தப்படும் பாங்கினைத் தெளிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

**6.** **ஒரு வெண்மணல் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** நாவலில்,

(அ) கல்வி

(ஆ) ஒழுக்கம்

(இ) உறவுகளைப் பேணுதல்

ஆகியவற்றிலே தாமோதரம் காட்டும் அக்கறை வெளிப்படும் வகையினை விளக்குக.

(20 புள்ளிகள்)

**7.** கவிஞர் அபூபக்கரின் **எல்லாம் உமதே** கவிதையில்,

(அ) உழைக்கும் வர்க்கத்தினரின் அவலம்

(ஆ) அவர்களைச் சுரண்டி வாழ்வோரின் அதமம்

(இ) சுரண்டுபவர்கள்மேல் கவிஞர் கொண்ட கடும் சீற்றம்

(ஈ) அணிகள், சொல்லாட்சிகளில் கவிஞரின் கவித்துவம்

ஆகியன வெளிப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) சிலப்பதிகாரம் **ஊர்காண் காதைப்** பகுதியில் வெளிப்படும் கவுந்தியடிகளின் அறவுணர்வு

(ஆ) **பாஞ்சாலி சபதம்** கவிதைப் பகுதியில் அநீதியான ஆட்சி தொடர்பாக வெளிப்படும் பாரதியின் சீற்றம்

(இ) **வீசாதீர்** கவிதையில் வெளிப்படும் கவிஞர் 'மஹாகவி'யின் மானுட நேயம்

(ஈ) **நெருக்கடி** சிறுகதையில் கதையோட்டத்துக்கு அமைவாக இயற்கையைச் சித்திரிப்பதில் ஆசிரியர் காட்டும் திறன்

(உ) **மானுடம் தழுவிய கவிஞர்கள்** கட்டுரையில் வெளிப்படும் க.கைலாசபதியின் இலக்கிய நோக்கு

(20 புள்ளிகள்)

* * *

23350

AL/2026/72/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடம் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**சுட்டெண் :** ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.

※ பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் இதழ்குவி உயிர்
(1) இ (2) ஐ (3) ஓ (4) ஏ (5) எ (……)

1.2 'ஈ' என்னும் உயிரெழுத்து வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) ஈடு (2) கீறல் (3) வீடு (4) வீரம் (5) நீட்சி (……)

1.3 நுனி அண்ண மூக்கொலி
(1) ம் (2) ன் (3) ண் (4) ங் (5) ந் (……)

1.4 நெடிற்றொடர்க் குற்றியலுகரம் இடம்பெற்ற சொல்
(1) பயறு (2) பாடாது (3) பஞ்சு (4) கோடு (5) நாலு (……)

1.5 உடன்நிலை மெய்மயக்கம் இடம்பெற்ற சொல்
(1) நாங்கள் (2) பார்வை (3) கற்பனை (4) சாந்தம் (5) கூத்து (……)

1.6 பின்வருவனவற்றுள் பகாப்பதம்
(1) தேநீர் (2) பருந்து (3) தேனீ (4) உருளை (5) காட்சி (……)

[பக். 2 ஐப் பார்க்க

1.7 கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்
(1) காட்டினான் (2) உதவுவார் (3) பறக்கின்றன
(4) வீழ்த்தினாள் (5) கைவிட்டாள் (……)

1.8 சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) மரத்தை (2) பூவை (3) இலையை
(4) வேரை (5) காயை (……)

1.9 பெயரடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) சமத்துவம் (2) மின்சாரம் (3) பெறுபேறு
(4) இடிபாடு (5) தோல்வி (……)

1.10 பின்வருவனவற்றுள் உவமைத் தொகை
(1) உள்ளக்கதவு (2) பால்நிலா (3) கடற்குதிரை
(4) கண்மலர் (5) மூடுதிரை (……)

1.11 வாக்கிய நிலையில் மாத்திரம் பால் உணரத்தக்க சொல்
(1) நல்லவன் (2) மாணவி (3) புத்திசாலி
(4) ஆடுகள் (5) ஆடவர் (……)

1.12 வேற்றுமைத் தொகைநிலைத் தொடராக **வரமுடியாதது**
(1) மரத்தைத் தறித்தான்.
(2) புத்தகத்தைக் கொண்டு வந்தான்.
(3) வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.
(4) அரிசி மாவால் தயாரித்த பலகாரம்.
(5) ஆசிரியரை மதித்து நடக்கவேண்டும். (……)

1.13 'இல்' உருபு ஏதுப்பொருளில் இடம்பெற்ற வாக்கியம்
(1) துக்கத்தில் தூக்கம் இழந்தேன்.
(2) தூக்கத்தில் கனவு கண்டேன்.
(3) தூக்கம் இன்றிப் படுக்கையிற் புரண்டேன்.
(4) தூக்கத்தில் இருந்து கண்விழித்தேன்.
(5) முகத்தில் தூக்கக் கலக்கம். (……)

1.14 இடை + வினை = வினை என்ற அமைப்புடைய கூட்டுவினை
(1) வெற்றிபெறு (2) பின்பற்று (3) தட்டிப்பறி
(4) காட்டிக்கொடு (5) கட்டிப்பிடி (……)

1.15 இறந்த காலம் உணர்த்தும் 'இ' எனும் இடைநிலை இடம்பெற்ற வினைமுற்று
(1) தாவினேன் (2) தாவியது (3) தாவினாள்
(4) தாவினாய் (5) தாவினீர்கள் (……)

1.16 பின்வருவனவற்றுள் தனிப்பெயரடை
(1) குறுகிய (2) பண்பான (3) பென்னம்பெரிய
(4) அகலமான (5) நேற்று (……)

[பக். 3 ஐப் பார்க்க

1.17 'உம்' எனும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வந்துள்ள வாக்கியம்
(1) கவனமாகவும் வேகமாகவும் வாகனம் ஓட்டினான்.
(2) கல்வியைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை.
(3) அவன் இரும்பையும் உடைக்கும் வலிமை உடையவன்.
(4) படிக்கும்போதே வேலையும் செய்கிறேன்.
(5) உடற்பலம் இருந்தபோதிலும் உள்ளத்தில் துணிவு இல்லை. (……)

1.18 'அல்ல' என்ற சொல்லைக் கொண்டு எதிர்மறை வாக்கியமாக **மாற்றமுடியாதது**
(1) அவன் மிகவும் பணிவான மாணவன்.
(2) அவனிடம் சிறந்த விவேகம் உண்டு.
(3) இது நான் எழுதிய கவிதை.
(4) எங்கள் ஆசிரியர் மிகவும் அன்பானவர்.
(5) நான் வாசித்த நாவல்களில் இது சிறப்பானது. (……)

1.19 வாக்கிய இணைப்பின்போது பயனிலையில் பால்மாற்றம் இடம்பெற வேண்டிய வாக்கியத் தொகுதி
(1) கண்ணன் வீட்டுக்குப் போனான் + கண்ணன் வீட்டுவேலைகளைச் செய்தான்.
(2) உழவன் வயலை உழுதான் + உழவன் நெல்லை விதைத்தான்.
(3) நான் பொழுதுபோக்கிற்காக சினிமா பார்ப்பேன் + நான் பொழுபோக்கிற்காகத் தொலைக்காட்சி பார்ப்பேன்.
(4) கல்வி உலகத்தால் போற்றப்படுகிறது + உயர் பண்பு உலகத்தால் போற்றப்படுகின்றது.
(5) நான் கருத்தாழம் மிக்க நூல்களைப் படிப்பேன் + நான் சுவாரசியமான நூல்களைப் படிப்பேன.
(……)

1.20 பின்வருவனவற்றுள் வழு உள்ள வாக்கியம்
(1) அடைமழை பெய்ததால் குளங்கள் நிரம்பி வழிந்தன.
(2) அடைமழை பெய்த காரணத்தால் குளங்கள் நிரம்பி வழிந்தன.
(3) அடைமழை பெய்ததன் காரணமாக குளங்கள் நிரம்பி வழிந்தன.
(4) அடைமழை பெய்ததன் பயனாக குளங்கள் நிரம்பி வழிந்தன.
(5) அடைமழை பெய்ததன் விளைவாக குளங்கள் நிரம்பி வழிந்தன.
(……)
(20 புள்ளிகள்)

❊ ❊

[பக். 4 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **2** ஆம், **3** ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

முதன் முதலில் சொற்களின் எழுத்துக்கள் அனைத்தையும் நோக்கி அகராதி அமைத்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிமார்களே ஆவர். தமிழ் மக்களுக்குக் கிறிஸ்தவமத உண்மைகளைத் தமிழ் மொழியிலே போதிக்க வேண்டுமென்று இவர்கள் கருதினார்கள். ஆகவே இவர்கள் தாமும் தமிழ் கற்க வேண்டுவது மிக அவசியமாய் இருந்தது. கற்பதற்குக் கருவி நூலாக அகராதி ஒன்று இயற்ற வேண்டுவதும் இன்றியமையாததாயிற்று. எனவே, தமிழில் முதன் முதலில் அகராதி தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இப்பாதிரிமார்களே ஆவர்.

அந்நிய மொழிக்கு உரியோராகிய பாதிரிமார்கள் அகராதி இயற்றப் புகுந்தது ஒரு நல்ல அதிருஷ்டம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், சில நன்மைகள் இதனால் விளைந்துள்ளன. முதலாவது, பிறமொழிகளில் அகராதிகள் செப்பமாக அமைந்துள்ள முறையைத் தமிழ் அகராதியிலும் கையாள முடிந்தது. இரண்டாவது, பாதிரிமார்களுக்குத் தமிழ் புதியமொழி ஆகையினாலே, இம் மொழியிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் இவர்கள் பொருளுணர வேண்டியவர்களாயிருந்தனர். ஆகவே, கடின பதம், எளிய பதம் என்ற வேற்றுமையின்றி, எளிய பதங்களுக்குங்கூடப் பொருள் விளக்க வேண்டுவது அவசியமாயிற்று. உதாரணமாக நான், அது, வீடு முதலிய சொற்களையும் அகராதியில் விளக்க வேண்டியதாயிற்று. மூன்றாவது, நூல் வழக்கிலன்றி, சாதாரண மக்கள் பல பிராந்தியங்களிலும் வழங்கி வந்த சொற்களும் அகராதியில் இடம்பெற்றன. தமிழ் கற்ற பண்டிதர்கள் இவ் வழக்குச் சொற்களில் பலவற்றை இழிசன வழக்கு என்றேனும், வழுச்சொல் என்றேனும் ஒதுக்கி விடுவார்கள். ஆனால், அந்நிய நாட்டுப் பாதிரிகள் இவ்வாறு ஒதுக்க முடியாது. அவர்கள் சாதாரண மக்களோடு, அதிலும் கல்வி பெறாத கீழ்த்தர மக்களோடு பழகி வந்தார்கள். அம் மக்கள் பேசுவதை உணர்வதும், அவர்கள் வழங்கும் சொற்களை உணர்வதும் அவசியம். எனவே அவ்வழக்குச் சொற்களும் அகராதியில் இடம் பெற்றன. இவ்வாறாக, தமிழ் மக்களுள் பல இனத்தாரும் வழங்கும் சொற்கள் எல்லாம் அகராதிகளில் அமைவதற்கு இப்பாதிரிமார்களே வழிகாட்டியாயிருந்தார்கள்.

(13 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அச்சியந்திரம் பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டதாயினும், அது தொடக்கத்தில் சமய சம்பந்தமான நூல்களைப் பிரசுரிப்பதற்கும், லத்தீன், கிரேக்க மொழிகளிலிருந்து ஐரோப்பிய மொழிகளுக்குப் பெயர்த்த நூல்களை வெளியிடுவதற்குமே பெரிதும் பயன்பட்டது. பெரும்பாலான ஐரோப்பிய மொழிகள் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டளவிலேயே இலக்கிய சிருஷ்டிக்கும் பிற தேவைகளுக்கும் தகுதி வாய்ந்தனவாகக் கொள்ளப்பட்டன. அதற்கு முன்னர் லத்தீன் மொழியே அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருந்தது. ஐரோப்பாவில் தேசிய இனக்கொள்கை உரம் பெற்று, புனித உரோமப் பேரரசு சிதறுண்டதைத் தொடர்ந்தே 'சுதேசி' மொழிகள் வளர்ச்சிவிசை பெற்றன. லத்தீன் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருந்தபோது அம்மொழியிலேயே கற்றோருக்காக நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன. சுதேசி மொழிகள் வழக்கிற்கு வந்ததும் நூல்களின் தொகை திடீரெனப் பெருகியது. மக்கள் பேசிய தாய்மொழியிலேயே பத்திரங்கள், ஆவணங்கள் முதலியன இருத்தல் வேண்டுமென்ற கோரிக்கை கிளம்பியது. மெல்ல மெல்ல உருவாகிக் கொண்டிருந்த சிறு வர்த்தக வர்க்கத்தினரின் குரல் இது. உதாரணமாக, 1422 இல் இலண்டன் நகரில் வாழ்ந்த மதுவடிப்போர் தமது பத்திரங்களில் லத்தீனைக் கைவிட்டுத் "தாய்மொழியை, அதாவது ஆங்கில மொழியையே பயன்படுத்துவது" என்று முடிவு செய்தனர். நகரத்தின் முக்கியமான தொழிற்பிரிவினர் இவ்வாறு முடிவு செய்யும்போது ஆங்கில மன்னன் ஐந்தாம் ஹென்றி, பேச்சு மொழியையே எழுத்து மொழி ஆக்குதல் வேண்டும் எனக் கூறியதை மேற்கோள் காட்டித் தமது வாதத்தை வலியுறுத்தினர். அதுகாலவரை ஆங்கில மொழியானது லத்தீன் தெரியாப் பெண்களுக்காகச் சிறுபான்மை அச்சிடப்பட்டது. வர்த்தகர்கள் அதனைப் பயன்படுத்த முடிவு செய்ததும் திடீரென அது 'மக்கள் மொழி' என்ற அந்தஸ்தைப் பெற்றது.

(i) அச்சியந்திரம் தொடக்கத்தில் எத்தகைய நூல்களைப் பிரசுரிப்பதற்குப் பயன்பட்டது?

(ii) ஐரோப்பாவில் எவ்வாறான சூழ்நிலையில் சுதேசி மொழிகள் வளர்ச்சி வேகம் கண்டன?

(iii) அதற்கு முன் அங்கு அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருந்தது எது?

(iv) அக்காலப்பகுதியில் அம்மொழியே அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருந்தது என்பதற்கு சான்றாகக் கொள்ளத்தக்க விடயம் யாது?

(v) இலண்டன் நகரின் முக்கியமான தொழிற்பிரிவினர் என்று இங்கு குறிப்பிடப்படுவோர் யாவர்?

(vi) அவர்கள், தாய்மொழியைப் பயன்படுத்துவது தொடர்பில் தாம் மேற்கொண்ட முடிவை வலியுறுத்துவதற்கு மேற்கோளாகக் காட்டிய விடயம் யாது?

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) பொது அறிவும் அதன் அவசியமும்

(ஆ) பழந்தமிழ் நூல் பதிப்புத்துறை முன்னோடிகள்

(இ) வளைகுடா நெருக்கடியும் உலகப் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்

(ஈ) சமூக ஊடகங்களும் சமூக நல்லிணக்கமும்

(உ) 'செல்வம் என்பது சிந்தையில் நிறைவு'

(25 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (அ) சங்ககால அகத்திணை இலக்கிய மரபில் வலியுறுத்தப்பெறும் முதல், கரு, உரிப் பொருள்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) கருப்பொருள்களுள் ஒன்றாக அமையும் 'தெய்வம்' பற்றிய விடயங்களை, ஐவகை நிலத்தோடு தொடர்புபடுத்தி நோக்குக.

(இ) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான 'பரிபாடல்', தெய்வங்களை மையப்படுத்தியதாக அமையுமாற்றினைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Past Papers Wiki



**5.** சோழர் காலப் பகுதியில் இடம்பெற்ற,

(அ) வைதிக சமயச் சார்பான காவியப் படைப்புகள்

(ஆ) அவைதிக சமயச் சார்பான காவியப் படைப்புகள்

(இ) இலக்கியத் தொகுப்பு முயற்சிகள்

என்பன தொடர்பில் கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

**6.** ஈழத்தில், மரபுவழி இலக்கிய வடிவங்களான,

(அ) தூது

(ஆ) புராணம்

(இ) கும்மி

ஆகியன சமகாலப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்றனவாக கையாளப்பட்ட வகையினைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்று** விடயங்கள் தொடர்பாக ஈழத்தவர் மேற்கொண்ட முன்னோடி முயற்சிகள் குறித்துக் கருத்துரைக்குக.

(அ) தமிழ்ப்புலவர் சரித்திரம்

(ஆ) நாவல்

(இ) சிறுகதை

(ஈ) நவீன கவிதை

(உ) தமிழாராய்ச்சி

(15 புள்ளிகள்)

**8.** (அ) (i) சொற்களில் அடுத்தடுத்து மூன்று மெய்கள் மயங்கி வருவதற்கு **இரண்டு** உதாரணம் தருக.

(ii) கூட்டுப்பகுதி இடம்பெற்ற வினைச்சொல் ஒன்றைத் தந்து, அதன் பகுபத உறுப்புகளை இனங்காட்டுக.

(iii) 'நான்', 'நீ' ஆகிய சொற்கள், செயப்படுபொருள் வேற்றுமை ஏற்ற நிலையில் எவ்வாறு அமையும்?

(iv) புணர்ச்சியின்போது 'ய்', 'வ்' ஆகியன உடம்படு மெய்யாக இடம்பெறுவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(v) 'ஆவது' என்னும் இணைப்பிடைச்சொல் பொருத்தமான வகையில் இடம்பெற்ற கூட்டு வாக்கியத்துக்கு தக்க உதாரணம் **ஒன்று** தருக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினைப்** பற்றி சிறுகுறிப்பு வரைக.

(i) வேற்றுமைப்புணர்ச்சி - அல்வழிப்புணர்ச்சி

(ii) உடன்பாட்டுவினை - எதிர்மறைவினை

(iii) தொழிற்பெயர் - வினையாலணையும் பெயர்

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library